# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029193

1. District : மாவட்டம் கன்னியாகுமரி | PS: காவல்நிலையம் V & AC Nagercoil | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 4/2018 | Date: நாள் 26.07.2018

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: கு.வி.மு.ச | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 | Sections பிரிவுகள்: 7 of the PC Act 1988
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 24.07.2018 16.00 hrs | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.07.2018 | Time : நேரம் 10.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — About 20 kms East Kallukoottam.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. ஆண்டனி [illegible] | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் கொத்தனார் | (g) Address : முகவரி 12/26, வண்ணார் விளை, பொதேல்புரம் அஞ்சல் கன்னியாகுமரி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு.சுப்பிரமணியன், [illegible] ஆய்வாளர் / பிறப்பு-இறப்பு பதிவாளர், கல்லுக்கூட்டம், கல்குளம் [illegible] கன்னியாகுமரி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் — [illegible] தாமதம்

* GCP 240-34(Type 2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

10. Total value of properties stolen / involved :
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு**

11. Inquest Report / Un-natural death Case No. if any:
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்**

12. FIR Contents (Attach separate sheet, if required) :
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

எதிரி
திரு.சுப்பிரமணியன்,
துப்புரவு ஆய்வாளர் /பிறப்பு-இறப்பு பதிவாளர்,
குளச்சல் கிழக்கு,
கல்லுக்கூட்டம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. நான் இன்று 26.07.2018ம் தேதி சுமார் 10.00 மணியளவில் அலுவலக பணியில் இருந்த போது கன்னியாகுமரி மாவட்டம், பெத்தேல்புரம் அஞ்சல் கதவு எண்.12/26, வண்டாவிளையை சேர்ந்த திரு.S.மரிய சைமன் மகன் திரு.M.ஆன்டனி வெனான்சியஸ் சைமன் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பெற்று அந்த புகார் மனு மீது முதல் நிலை விசாரணை மேற்கொள்ள அனுமதி வேண்டி சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு இ-மெயில் மூலம் அனுப்பி PE.230/2018/LB/KK, நாள்.26.07.2018ன்படி அனுமதி பெற்று அதனை பதிவு செய்து அதன் மீது முதல்நிலை விசாரணை செய்யப்பட்டது. மேற்படி மனுவின் மீது மேற்கொண்ட விசாரணையில் வழக்கு பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருந்த காரணத்தால் முதல்நிலை விசாரணை முடித்து தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சென்னை அவர்களுக்கு தகவல் தெரிவித்து வாய்மொழி உத்தரவு பெற்று இன்று 26.07.2018ந் தேதி மதியம் 13.30 மணிக்கு கன்னியாகுமரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கு.எண்.4/2018 u/s 7 of the P.C Act 1988 ஆக எதிரி திரு.சுப்பிரமணியன், துப்புரவு ஆய்வாளர்/பிறப்பு-இறப்பு பதிவாளர், குளச்சல் கிழக்கு, கல்லுக்கூட்டம், கன்னியாகுமரி மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு பின்வருமாறு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...........................................on point of jurisdiction.

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு** M.A.V. [signature]

Signature of the Officer in-charge, Police Station
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்** S. [signature]

15. Date & Time of despatch to the court: 26/7/18
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**
26/7/18

Name: **பெயர்** S. [handwritten name]
Rank: **நிலை** No. **எண்** .........

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

அனுப்புநர் M.ஆன்டனி வெனான்சியஸ் சைமன், வயது 50, S/o S.மரிய சைமன், 12/26, வண்டாவிளை, பெத்தேல்புரம் அஞ்சல். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாகர்கோவில், ஐயா, நான் வண்டாவிளையில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னுடைய அப்பாவிற்கு என்னையும் சேர்த்து 6 பெண் பிள்ளைகள் உட்பட 7 பிள்ளைகள் உண்டு. எங்களது அப்பா S.மரிய சைமன் அவர்கள் 05.10.2002ல் இறந்துவிட்டார். அவருடைய இறப்பு சான்றிதழ் வாங்கவில்லை. எங்களது குடும்ப சொத்தை பாகம் செய்ய வேண்டியுள்ளதால் எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் கேட்டு கல்லுக்கூட்டம் பிறப்பு-இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் சென்று கேட்டபோது எங்களது தந்தையின் இறப்பு பதிவாகவில்லை என தெரிவிக்கப்பட்டது. அதனால் எங்களது அப்பாவின் இறப்பு சான்றிதழ் வழங்குவதற்காக எனது அக்காள் M.பிலோமின் மேரி அவர்கள் பத்மநாபபுரம் R.D.O கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து R.D.O அவர்கள் எங்களது அப்பாவின் இறப்பு 05.10.2002 என்றும் இதனை குளச்சல் கிழக்கு பிறப்பு-இறப்பு பதிவாளர் அவர்கள் திரு.மரிய சைமன் அவர்கள் இறப்பை 05.10.2002 என்று பதிவு செய்யலாம் என உத்தரவு போடப்பட்டது. அதன் அடிப்படையில் கடந்த 05.07.2018ம் தியதி வாக்கில் எனது அக்காள் செல்வி M.பிலோமின் மேரி, கல்லுக்கூட்டம், பிறப்பு-இறப்பு பதிவாளர் திரு.சுப்பிரமணியன் என்பவரிடம் எங்களது அப்பாவின் இறப்பை பதிவு செய்ய R.D.O உத்தரவு நகலுடன் மனு கொடுத்துள்ளார். அவர் அந்த மனுவை பெற்றுக்கொண்டு அரசுக்கு ரூ.500/- செல்லான் கட்ட வேண்டும் என்று ஒரு வங்கி செல்லான் மற்றும் ஒரு படிவத்தை கொடுத்து அனுப்பியுள்ளார். அதன் பிறகு எனது அக்கா வழக்கறிஞராக பணிபுரிந்து வருவதால் அலுவல் நிமித்தம் அவருக்கு நேரமில்லாததால் அந்த செல்லான் மற்றும் படிவத்தில் கையொப்பமிட்டு என்னிடம் கொடுத்த செல்லான் ரூபாய் 500/- வங்கியில் கட்டி இந்த படிவத்துடன் கல்லுக்கூட்டம் பிறப்பு-இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் ஒப்படைக்க சொன்னார். நான் அதன்படி 19.07.2018ல் வங்கியில் ரூ.500/-க்கு செல்லான் கட்டி அந்த அடிக்கட்டை ரசீதுடன் அந்த படிவத்தையும் 24.07.2018ம் தியதி மாலை சுமார் 4 மணியளவில் கல்லுக்கூட்டம் பிறப்பு-இறப்பு அலுவலகம் சென்று பிறப்பு-இறப்பு பதிவு அலுவலர் திரு.சுப்பிரமணியனை சந்தித்து செல்லானை எனது அக்காள் கையொப்பம் போட்டு கொடுத்த படிவத்துடன் சேர்த்து கொடுத்து அவரிடம் எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் எப்போது கிடைக்கும் என்று கேட்டேன். அதற்கு அவர் R.D.O கோர்ட் உத்தரவுபடி பிறப்பு-இறப்பு பதிவு செய்து சான்று வழங்க நிறைய வேலை உண்டு அதனால் பிறப்பு இறப்பு சான்று தரவேண்டுமானால் எனக்கு தனியாக ரூபாய் 1,000/- தரவேண்டும் என்று கேட்டார். நான் அவரிடம் இப்போது அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் எனக்கு தனியாக ரூ.1000/- தந்தால்தான் உன் அப்பாவின் இறப்பு சான்றிதழ் கொடுக்க முடியும். வியாழக்கிழமை அதாவது 26.07.2018ம் தியதி சாயங்காலம் ரூ.1000/- கொண்டு வந்து தந்துவிட்டு இறப்பு சான்றிதழ் பெற்றுக்கொள் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தேன். மேற்படி சுப்பிரமணியன் என்பவருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. மேலும் நேற்று 25.07.2018ம் தியதி எனக்கு அவசரமான கட்டிட வேலை இருந்ததால் இன்று 26.07.2018ம் தியதி எனது அப்பாவின் இறப்பு சான்று கொடுக்க லஞ்சம் கேட்ட பிறப்பு-இறப்பு பதிவாளர் திரு.சுப்பிரமணியன் மீது நடவடிக்கை எடுக்க மனு சமர்ப்பிக்கிறேன். அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd. M.ஆன்டனி வெனான்சியஸ் சைமன் 26.07.2018 Sir, Received the petition on 26.07.2018 at 10.00 hrs and sent to Head Quarters Sd. S.John Benchamin, Inspector of Police, V&AC, Nagercoil. இன்று 26.07.2018ம் தேதி 11.30 மணிக்கு DVAC சென்னை Memorandum No. PE.230/2018/LB/KK dt.26.07.2018 உத்தரவுப்படி ஆரம்ப கட்ட விசாரணை பதிவு செய்து விசாரணைக்கு எடுத்து கொண்டேன். Sd. S.John Benchamin, Inspector of Police, V&AC,

Nagercoil. Conducted Preliminary Enquiry on today 26.07.2018 in this regard and found prima-facie for the above mentioned allegation and registration of Regular Case is warranted in the above PE. The matter was intimated orally to the SP/SIC i/c SP SR, DVAC, Chennai and accordingly registered a case in Kanyakumari V&AC Cr.No.4/2018 u/s 7 of the PC Act 1988 on today 26.07.2018 at 13.30 hrs against Tr.Subramanian, Sanitary Inspector/Birth & Death Regsitrar, Kallukootam after conducting a descreet enquiry the original FIR along with original complaint petition sent to the CJM Court, Nagercoil and copies sent to the officers concerned. Sd. S.John Benchamin, Inspector of Police, V&AC, Nagercoil.

S. [signature] 26/7/18
Inspector
V&AC Nagercoil